சிவமயம்.

பழைய கோட்டை உயர்திரு உத்தமக்காமிண்ட
ராய்பகதூர் நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் அவர்களின்
திருமிகு குமாரன்
என். நல்லசேனாபதிச் சர்க்கரை மன்றாடியார்க்கும்
ஊத்துக்குளிச் ஜெமீன்தார், மாண்புயர் அகத்தூர்,
முத்துகிருஷ்ணசாமிக் காளிங்கராயர் அவர்களின் குமாரத்தி
திருவளர். அகத்தூர் அம்மைக்கும்
நடந்த திருமண

# வாழ்த்துக் கவி.

## ஆசிரியப்பா

புகழ்பரவு விசுவருட ஆவணித்திங்களாம்
புகர்கிழமை சப்தமிதிதி
போதநிறை பதினாலுதேதி யனுசாதிநாள்
பொங்குநல சிம்மநிலையாம்
அகமகிழ மாஞூரி நற்கொங்கர் குலதிலக
அன்புநிறை பயிரகோத்திர
அண்ணலாம் நல்லதம்பியெனும் சர்க்கரை
அழகுநிறை சிரேட்டபுத்ர
மிகமகிழ்வு கொண்டநிறை நல்லசேனாபதி
விரும்புசர்க்கரை மன்றாடியார்
வேதநெறிபிறழாத ஊத்துக்குளிச்சமீன்
வித்வநிறை முத்துக்கிருஷ்ண
பகர்நலங்கண்ட சுபகாளிங்கராயர்சுக
பண்புதிருவாட்டியம்மை
பக்திப்பெருக்கநிறை அகத்தூர் அம்பாவெனும்
பயன்திருவை மணமுடித்தான்
மகிமைநிறை மாபசுக்காவலன் அழகுநிறை
மாபெருங் கொடைவலாளன்
மாண்புயர் பூர்வீக சமுதாய துரைவீரன்
மன்னனும் கொங்குநாட்டு
மகிபதிகுலபதி பார்த்திபன் தனையனும்
வரும்பெரும வள்ளல்காணும்
வாழ்க்கைத் துணைவியொடு பாக்கியம் பெருக நலம்
வண்மையும் பெருக நீடு
யுகபலம் காலமாம் நீடூழி வாழ்க நீ
வுறுமுருகள் காக்கவென்றும்
ஊக்கமது குன்றா சிலாக்கியம் கொண்டினிது
ஊழூழி காலம்வாழ்க!
விகசிதப் பிரபையெம் பாக்யாதி பதிசமூகவேந்தனும்
தலைவன் வாழ்க!
வேதமுடிவான நடராஜனருள் போற்றி நல
மேதினியில் வாழ்கமாதோ!

இங்ஙனம்

ஜவ்வாதுபட்டி,
24—8—1941

மு. கா. அம்பலவாணன்,
இடையகோட்டை சமஸ்தான வித்வான்.